செ.வெ.எண் 817 நாள் 10-11-09

# அரசு செய்திக் குறிப்பு – 10–11–2009

நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு, பெருமழை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி இன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்; மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், வருவாய்த் துறை ஆணையர், வருவாய்த் துறை செயலாளர், சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி., புலனாய்வுத் துறை ஐ.ஜி. ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் – தற்போது அங்கே எடுக்கப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் குறித்தெல்லாம் கேட்டறிந்தார்.

நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் உடனடியாக வழங்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பவ இடங்களை நேரில் கண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறவும், நிவாரணப் பணி களைத் துரிதப்படுத்தவும் உடனடியாக அங்கே விரைந்து சென்றிடுமாறு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களையும், சிறு தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்களையும் முதலமைச்சர் பணித்து, அவர்கள் இன்றே புறப்பட்டு நீலகிரி செல்கிறார்கள். வருவாய்த் துறை ஆணையரிடம் முதலமைச்சர் அவர்கள், கோவை மாவட்டத்திலிருந்து உயர் அதிகாரிகள் சிலரை நீலகிரி மாவட்டத்திற்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அறிவுறுத்தியிருக்கிறார்.

மற்றும் தீயணைப்புத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, தேசிய பேரிடர் மீட்பு படை ஆகியவற்றின் சார்பில் போதுமான அளவிற்கு அலுவலாளர்களையும் பணியாளர்களையும் அங்கே அனுப்பிட வேண்டுமென்றும் முதலமைச்சர் கூறியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மண்ணெண்ணெய், உடை போன்றவைகள் உடனடியாக கிடைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியருக்குக் கூறப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9